**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# நீதிநெறி விளக்கம் காட்டும் அறச்சிந்தனைகள்

**முனைவர் ச. சோமசேகர்**
உதவிப்பேராசிரியர்
மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் - 21

**ஆய்வுச் சுருக்கம்**

*அறக் கோட்பாடுகளின் களஞ்சியமாகவும், கற்பனை வளத்தோடு காணப்படுவது தமிழ் இலக்கியங்கள் ஆகும். சங்க காலம் அகப்பொரு இலக்கியங்களில் அறக் கோட்பாடுகள் ஊடுபொருளாக பேசப்பட்டுள்ளது. இத்தகைய இலக்கியங்கள் "தமிழர்களின் வாழ்வு அறமாகும். "அறமே வாழ்வாகும்". நீதிநெறி விளக்கம் காப்பு செயல் உட்பட 101 நேரிசை வெண்பாக்களைக் கொண்டதாகும். கல்வியின் சிறப்பு தொடங்கி அரசாட்சியின் சிறப்பு, அமைச்சர்களின் கடமை, முயற்சியுடைமை, நட்பு, சொல்வன்மை, குழந்தை நலம், கருவுற்ற பெண்களின் நிலை, தவம், துறவியரின் பண்பாடு ஆகியவை பாடல்கள் மூலம் தெளிவுடன் விளக்கப்பட்டுள்ளது.*

## Abstract

Tamil literature, with its treasure trove of moral philosophies and rich imagination, serves as a repository of ethical principles. In the Sangam period, moral concepts were dis—cussed through the classical *Akaporu* literature. Such works reflect the idea that "the life of the Tamils is based on righteousness" and that "righteousness is life." These texts, including 101 *Neericai* and *Venpa* verses, explain the principles of justice, governance, the duties of ministers, the value of effort, friendship, eloquence, the well—being of children, the condition of pregnant women, asceticism, and the qualities of monks. These subjects are elaborately explained through songs, offering clear insights into these concepts.

**திறவுச்சொற்கள்:** *அறம், முயற்சி, கல்வி, ஈதல், நெடுந்திரை, நன்னீர், வலிது*

**முன்னுரை**

*நீதி நூல்கள் இரண்டு வகையாக அறத்தை கூறுகின்றது. ஒன்று உடன்பாட்டு முறை மற்றொன்று என்னென்னவற்றை செய்ய வேண்டும். என்று கூறுவது இரண்டாவது முறை சற்று கடுமையாகக் கூறும் எதிர்மறைமுறை நீ! இதனை செய்யாவிட்டாலும், இத்தகைய துன்பத்தை அடைவாய்! என்றும் உலகம் உன்னை பழி தூற்றும் என்றும் விழித்துக் கூறும் முறையாக நீதிநெறி விளக்கம் இரண்டாவது முறையை அதிகம் எடுத்துரைக்கின்றது. சிற்றிலக்கிய தந்தையாக விளங்கிய "குமரகுபரர்" பாடிய "நீதிநெறி விளக்கம்" 101 நேரிசை வெண்பாக்களைக் கொண்டு விளங்குகிறது. முழுவதும் வாழ்வில் ஏற்று கடைபிடிக்க வேண்டிய நீதிக் கருத்துக்களை இடம்பெற்றுள்ளன. என்று நூலை பற்றி கூறும் க. த. திருநாவுக்கரசு அவர்கள் யாவற்றையும் விட சிறப்புமிக்கது. குமரகுருபரர் இயற்றிய நீதிநெறி விளக்கமாகும். தமிழில் உள்ள நீதி நூல்கள் திருக்குறளுக்கு அடுத்த நிலையில் சிறப்புமிக்க*

நீதி இலக்கியமாக விளங்குகின்றது. திருக்குறள் நீதி இலக்கியம் (பக்-348,355)-6 என்று சிறப்பித்து கூறியுள்ளமையே! நீதிநெறி விளக்கத்தின் உயர்வினை உணர்த்துவதாக உள்ளது.

### நீதிநெறி விளக்கத்தின் சிறப்பு

குமரகுருபரர் இலக்கிய நயம் படைத்தவர் என்பதை ஒவ்வொரு பாடலிலும் நிருபிக்கிறது. அவர் கையாண்டுள்ள உவமைகள் அனைத்தும் அவரின் இலக்கிய புலமைக்குச் சான்றுகளே! என்றால் மிகையன்று. எ.கா: **"பொன்மலர் நாற்றம் முடைத்து"** பக்-5-12 என்பதும் **"தீச்சுடர் நன்னீர் சொரிந்து வளர்ந்ததற்றால்"** பக்-19-13 என்பதும்

**"மா பறவை புல்லுரு அஞ்சுவது போல"** பக்-23-14 **"மறலி உயிர் குடித்த கால் முளையே இன்புறுத்தக்கன"** ஆகும் குமரகுருபரர் தமிழ் உணர்வு, தாய் மொழி பற்று, நாட்டுப் பற்று மிக்கவர். மனிதநேயம் உடையவர் என்பதும் அவர் தம் பாடல்களை மூலம் நம்மால் உணர முடிகிறது. எ.கா: **"மலரவன் வண்தமிழ் வன் தமிழோர்க்கு ஒவ்வான்"** பக்-7-15 என்ற தொடர் மூலம் **"அழிந்து போகும் வெற்று உடம்பை படைக்கின்ற நான்முகன் புலவர்கள் படைத்த அழியாத தமிழ் மக்களுக்கு ஒப்பாக மாட்டான்"** என்ற கூற்று தமிழ் உணர்வு போற்றத்தக்கதாகும். இன்றைய இளைய தலைமுறையினருக்கு தேவையான, நீதிகள், வாழ்க்கை நெறிமுறைகள், தமிழ் உணர்வும், நம்முடைய வாழ்வை வளப் படுத்துவன. நம்மை செம்மைப் படுத்த, பிறப்பின் மேன்மையை, உணர்ந்து; உண்மையாக அன்பு, அமைதியான, நிம்மதியான ஒரு வாழ்க்கை வாழ பெரு உதவியாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

### இளமைப் பருவம்

**நீரில் குமிழி இளமை நிறை செல்வம் நேரில் சுருட்டும் நெடுந்திரைகள் நேரில் எழுத்தாகும் யாக்கை எம்பிரான் மன்று** காப்பு பாடல் (பக்-01)-16 நீதி.விளக்கம்

**"மனிதர்களின் வாழ்வு, இளமைப் பருவம், செல்வம், யாக்கை இம்மூன்றும் நீர்க்குமிழி போன்றது. செல்வம் - கடல் அலைகள், யாக்கை - நீரில் எழுதப்படும் எழுத்து போன்றது".** -17

நிலையற்ற இவ்வாழ்வில் நிலையான பொன்னம்பல இறைவனை சிவபெருமானை நீ வணங்காதது காலத்தைக் கழிக்காதே! என்று அருமையாக விளக்குகிறார். "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்", பருவத்தே பயிர் செய்" என்று இக்கணத்தில் வாழ நமக்கு வழிகாட்டுகிறார். குமரகுருபரர்.

### கல்வியே துணை

**"அறம் பொருள் இன்பமும் வீடு பயக்கும்…**

**சிற்றுயிர்க்கு உற்ற துணை"** பாடல்2 நீ வி -18

கல்விச்செல்வம் மட்டுமே ஒரு மனிதனுக்கு நால்வகை பேற்றைத் தரும் என்கிறார் ஆசிரியர். குற்றமே இல்லாத புகழையும் துன்பமே இல்லாத இன்பத்தையும் தருகிறது கல்வி மட்டுமே. அதனால்தான் கல்வியைப் போல நிரந்தரமான துணை ஏதும் இல்லை இதனை வள்ளுவர் "ஏழுமையும் ஏமாப்படைத்து கல்வி" என்று ஏழேழு பிறவிக்கும் கல்வி மட்டுமே நமக்கு துணையாக இருக்கும்.

**"தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும் பெரிது"**……பக்-3-19

நீ காமத்தால் உண்டாகும் சிற்றின்பத்தை விட கல்வியால் வரும் இன்பம் பேரின்பம் ஆகும். கல்வியை மனதில் பதித்தல்

**"வருந்தித்தாம் கற்றென ஓம்பாது …… பொருள் செய் திடல்"** பக்-8-20 நீ-வி

தாங்கள் கற்ற கல்வியின் உட்பொருளை மாந்தர்கள் பாதுகாத்தல் அவசியம். பாதுகாக்காது மீண்டும் மீண்டும் கற்கக் கூடாது. அவ்வாறு செய்தோமே ஆனால், அது ஒரு பொருளைத் தவற விட்டு பிறகு சல்லடை கொண்டு சலித்து எடுத்தவைப் போன்றதாகும்.

### வறியவர்க்கு ஈதல்

**"வாங்கும் கவளத் தொருசிறு வாய்த்தப்பின் தூங்கும் களிறோ…..கிளையோடு அயின்று".**

(பா-37;பக்-37; நீதி.விளக்கம்-27.)

பாகர் கொடுக்கும் உணவை வாங்கும் யானையானது சிறிது தவறுக் கீழே சிந்தினால் யானைக்குக் கவலை இல்லை. ஆனால், யானை சிந்திய உணவைக் கொண்டு ஊரும் இயல்புடைய ஒரு கோடி எறும்புகள் தம் சுற்றத்துடன் உயிர் வாழும். அரசன் பிறருக்கு கொடுத்து வாழ வேண்டும்.

கயமை

தீயோர் கீழ்மைக் குணமுடைய கயவர் ஆகியோர் சமுதாயத்திற்கும் தனி நபர்களுக்கும் கேடு சூழ்வர். அத்தகைய சமுதாய புல்லுருவிகளைக் குமரகுருபரர் கடிந்துரைக்கின்றார். **"பிறருக்கு கேடு நினைப்பது மட்டுமின்றி தமக்கு கேடு வந்துற்றபோதும் எவ்வித உணர்வு மற்று இருப்பர். பெரும் பாம்புகள் தூங்கிக்கிடக்கும் போது தம்மைச் சூழ்ந்துள்ள பெரும் தீயினையும் உணரும் உணர்வற்றுக் கிடப்பதுப் போல எதற்கும் கவலைப் படாதவர்களாகக் கீழோர் திகழ்வர்".** *(நீதிநெறி விளக்கம் பா-34;-38)* என்கிறார் குமரகுருபரர். எதற்கும் கவலைப் படாத இத்தகையவர் நண்பரைப் பகையாக்கிக் கொள்ளல் பகைவரை நட்டல் ஒற்றர்களை இகழுதல் எல்லோரையும் ஐயுறுதல் பெரியோர்கள் உறுதிமொழிகளை மதியாமை, தம் குண இயல்புகளில் அடிக்கடி வேறுபடுதல் ஆகிய கீழ்மைக் குணமுடையோராய்த் திகழ்வர். இத்தகையோர் கெட்டு அழிவது உறுதி. அழிவை விரும்புவோரே இத்தகைய குணமுடையவராய்த் திகழ்வர். என்பது குமரகுருபரர் கொண்ட துணிபு.

**"இராமன் பிறந்ததால் ரவிகுலம் புகழ்பெற்றது. துரியோதனன் பிறந்ததால் கௌரவ வம்சம் அழிந்தது".** *(வேமன சதகம், பா.16-40)* என்ற எடுத்துக்காட்டால் விளக்குகிறார்.

ஈ வயிற்றில் புகுந்து விட்டால் உபாதை ஏற்படுவது போல, கீழ் குணமுள்ளவனை வீட்டில் சேர்த்தால், எவ்வளவு உயர்ந்தோனுக்கும் துன்பம் வந்து சேரும். ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவர்கள் என்பது அவருடைய துணிவு. குமரகுருபரர் கீழோரது ஆரவாரம் பற்றிக் குறிப்பிடும் பொழுது அடக்கம் இல்லாத அறிவற்ற கீழோர் அறத்திற்கு மாறான, ஆகாத செயல்களைக் கூறி முழங்குவர். என்று பழிக்கின்றார். சான்றோர் செயற்கரிய செய்த போதும் அடங்கியிருப்பர் என்று புகழ்கின்றார்.

மேலும் கீழ் மக்கள் அறமற்ற செயல்களை வலிதில் எடுத்துக் கூறி திரிவதுடன் கேட்போர் எள்ளி நகையாடுதலாகிய தீமையொன்றினையே பெரும் பயனாகக் கருதித் திரிவர். பொருட்பயன் ஏதும் இல்லாவிடினும் பிறர் உடல் நடுங்கித் துடித்தலைக் கண்டு மகிழக் கருதி, வழிச் செல்வோரை அடித்துத் துன்புறுத்தும் இயல்புடையவர் என்று கூறுவது இவர்கள் எதற்கும் அஞ்சி ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்பதையும் உணர்த்துகிறது.

## பொதுநீதி

வளமான வாழ்க்கை என்பது உடல் நலத்தோடு பெரிதும் மனநலத்தையும் சார்ந்து இருக்கின்றது. மனநலம் பெற்று மனிதன் பிறர் மதிக்க வேண்டுமாயின், அவன் தீய இயல்புகளிருந்து இருந்து விடுபட்டு நல்ல மனிதனாக வாழ வேண்டும். அதற்குரிய நெறிமுறைகள் துறவியர் இல்லறத்தார் அரசர் ஆகிய அனைவருக்கும் பொதுவானவையே. சமுதாயத்தின் எல்லா நிலையினருக்கும் பொதுவான நீதிகள் குறித்து குமரகுருபரர் கூறும் கருத்துக்களோடு வேமனரின் கருத்துக்கள் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

முயற்சியுடைமை சமுதாயத்தில் தலைவனும் பிறரும் வினைகளச் செய்யும் இடத்தில் இடைவிடாது மெய் முயற்சி உடையவராக இருத்தல் அவசியம். முயற்சி இன்று எடுத்துக் கொண்ட எச்செயலும்; இனிது முடிவுறாது. எச் செயலைச் செய்யும் பொழுதும் கடினமானது என்று சோர்வு இல்லாமல், செய்யும் பொழுது வெற்றி கிடைக்கும் என்பதை குமரகுருபரர்,

**"சாகுத் தருணத்திலிருக்கும் உயிர்க்கும் மருந்து கொடுப்பதனால் ஒரு தீங்கும் விளையாதிருத்தலேயன்றி அது பயனுடையதாய் நன்மை பயத்தலும் உளதாம் என்னும் உவமை முகத்தால் இறக்கும் வரையிலும் முயற்சி உடையயவனாயிருத்தல் வேண்டும்". என்பதை எடுத்துரைக்கின்றார்.** *(நீதி விளக்கம் பா-49;ப-71;54)* மேலும் ஊழியர் என்று மடியினை மேற்கொள்ளல் ஊழையும் உட்பக்கம் காண வேண்டும் என்பதை மார்க்கண்டேயேன் கதையை உதாரணமாக கூறி விளக்குகின்றார். இடைவிடாமல் முயன்றால் கைகூடும். ஆகாதவையும் கை கூடும். என்று குமரகுருபரர் கூறுவது போலவே கண்ணோக்கத்தக்கது. இதனையே திருவள்ளுவர் கூட

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன்

மெய்வருத்தக் கூலி தரும்"

என்று கூறியிருப்பதை உணரலாம்.

### இடம் அறிதல்

ஒரு செயலைச் செய்ய முயலும் போது காலம் அறிந்தும், இடம் அறிந்தும் செய்யக் கூடிய காரணங்களை அறிந்தும், பயனை அறிந்தும், துணையாய் இருப்பவர்களில் வலிமை அறிந்தும், முயலுதல் வேண்டும். இதனை குமரகுருபரர் அறிவுறுத்துகின்றார். நீதி விளக்கம் பா-52;-56 வெளியற்ற விளக்கு அவிழ்த்து விடுவது தானே என்று எண்ணி காற்றடிக்கும் இடத்தில் எவரும் ஏற்க மாட்டார்கள். அதனை உரிய இடத்தில் ஏற்றி எரியும் வரை முயன்று பாதுகாக்கவே செய்வார்கள் என்று இடமடைந்து மகிழுதர்க்கு உதாரணமும் கூறுகின்றார் நீதிநெறி விளக்கம் பா-50;57.

### சொல்வன்மை

செல்வன் கருத்திய செயலை முடித்தற்குரிய அறிவாற்றல் ஒரு வருடம் காணப்படினும் அவற்றை எடுத்துரைத்து பிறரை தன்மையப் படுத்தும் சொல்வன்மை ஒருவருக்கு இன்றையாததாகும். இதனையே குமரகுருபர நல்ல கல்வியறிவில் சிறப்படைவது சிறந்த சொல்வன்மையினாலே ஆகும். **"கல்வியுடன் சொல்லாற்றலும் இருப்பின் அவ்வாற்றல் பொன்னால் ஆகிய மலர் நல்ல மனம் பெற்று வழங்குவது போன்றது"** (நீ.,விளக்கம் பா-5;-58) என்றும் சொல்வன்மையுள் சொல் வன்மையற்றவர் கல்வியறிவு பயனற்றது என்றும் அறிவுறுத்துகின்றார். சமுதாயத்தில் ஒருவர் பெரும் ஆக்கமும் சிறப்பும் ஏன்? ஈடுபாடு கூட சொல்வன்மை உடையதலேயே அமையும்.

உடைமையும் இன்மையும் இல்லாருக்கு இவ்வுலகம் இல்லை. அதனால் உலக வாழ்க்கையை நன்முறையில் நடத்த பொருள் எல்லோருக்கும் வேண்டப்படுவதாகும். மதிப் பற்றவர்களுக்கு மதிப்பை உண்டாக்குவது பொருட்செல்வம் என்பதையே குமரகுருபரர் விரிவாகவே எடுத்துரைக்கின்றார். இதனையே வள்ளுவர்

"அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருள்இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்று கூறுகிறார். **"பொருள் உடையோர் எவ்வளவு கடுஞ்சொற்களை கூறுபவர்களாயினும் அவர்கள் அடியில் உலக மக்கள் ஒதுங்குவர் பொருள் அற்றவர் எவ்வளவு இன் சொற்களை உடையவராயினும், அவர்களை என்றும் அச்செல்வம் உடையவர்கள் ஆயினும், கற்றவரும் அவருக்கு குற்றமே செய்வர்"** (நீதி., விளக்கம் பா-12;59) என்றும் **"உரிமையாளர்களிடமும் அமைந்து கிடக்கும் அழகு. கல்வி அறிவு, குடிநலம் ஆகிய நலன்கள் தினை அளவு சிறப்படையாது"** (நீதிநெறிவிளக்கம் பா- 10;60) என்றும் குமரகுருபரர் எடுத்துரைக்கின்றார். இவர் கருத்துக்களில் இருந்து கல்வி வளம் சிறந்ததற்கு பொருள் வளம் வேண்டும். என்பதை உணர முடிகிறது.

### முடிவுரை

சமுதாயத்தில் உள்ள எல்லா மக்களும் பின்பற்ற வேண்டிய பொது நீதிகளையும், வாழ்வியல் நெறிமுறைகளை வாழ்வின் உன்னத தன்மையும், பொருளையும் மிக அருமையாக குமரகுருபரர் தம்முடைய நீதிநெறி விளக்கம் என்ற நூலின் மூலம் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இதை இன்றைய தலைமுறைக்கு நாம் கொண்டு சேர்ப்பது நம்முடைய தலையாய கடமை . ஒரு வாழ்வியல் நெறிமுறைகளையும் கற்று அறம் சார்ந்தஅறத்தோடு இணைந்த ஒரு வாழ்க்கை மேற்கொள்ள வேண்டும்.

### துணைநூற் பட்டியல்

1. கண்ணுசாமிப்பிள்ளை., தாழி. சிவ. (தொ.ஆ.,), நீதி நெறி விளக்கம், தருமபுரம், தருமபுர ஆதினம், 1949.
2. லோகிதாசன் தங்கவயல் (மொ.ஆ,), வேமனர் வேதவாக்கு, சென்னை.
3. அருணாசலம், மு., மற்றும் பிறர், நீதி நெறி விளக்கக் கட்டுரைகள், காசிமடம், திருப்பனந்தாள், 1983.
4. கந்தசாமி, ஆ., குமரகுருபரர் கற்பனை, எழில் முருகன் பதிப்பகம், 1985.
5. குன்றக்குடி அடிகளர், வாழ்க்கை விளக்கு, கலைவாணி புத்தகாலயம் 1972.
6. கைலாசபதி, க., ஒப்பியல் இலக்கியம், பாரி நிலையம், சென்னை, 1969.